# நட்பேடு

Magazin der Freunde ✻ Magazine of Friends

விசுவாவசு வருடம்

மார்கழி மடல்



| S/N. | Contents | Page No. |
|---|---|---|
| 1 | குறள் பேசும் பாடம் | 3 |
| 2 | ஒளி பரவட்டும் | 4 |
| 3 | கதை கதையாம் காரணமாம் | 5 |
| 4 | ஊர்க்குருவி | 6 |
| 5 | Stuttgart Tamil Sangam e.V.– தமிழ்ப் பள்ளி | 8 |
| 6 | Historical Highlights | 9 |
| 7 | பதில் தேடி விளையாடு | 11 |
| 8 | Another warren in progress | 12 |
| 9 | Short and Easy German Sentences | 16 |
| 10 | How reading changes your brain | 17 |
| 11 | அறிந்ததில் அறியாதது | 18 |
| 12 | கீற்றல்கள் | 19 |
| 13 | நிழற்பதிவு | 20 |
| 14 | CTRL + Learn: My Computer Adventures | 21 |
| 15 | நிழல் நெஞ்சங்கள் | 23 |
| 16 | Blockchain Revolution | 24 |
| 17 | சொல்லுங்கள் வெல்லுங்கள்! | 27 |
| 18 | இறுதியல்ல.., நிறைவு | 28 |

# குறள் பேசும் பாடம்

## தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.




**விளக்கம் (தமிழ்)**

மணலில் கிணறு தோண்டத் தோண்ட நீர் ஊறும். அதுபோல மனிதன் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருந்தால், அவனுடைய அறிவு நாள்தோறும் பெருகிக் கொண்டே இருக்கும்.

**Explanation (English)**

Just as water springs forth when one digs deeper into a sandy well, human knowledge increases continuously through persistent learning.

**Deutsche Übersetzung (German)**

Wie beim Graben eines Brunnens im Sand immer mehr Wasser hervorquillt, so wächst das Wissen der Menschen, je mehr sie lernen.

**-புவனேஸ்வரி மெய்யரசு**

# ஒளி பரவட்டும்

அன்பு வாசகர்களே,



அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்! இந்த ஆண்டு , உங்கள் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் அனைத்து செல்வங்களும் சிறப்புகளும் நிறைந்த ஒன்றாக அமைய எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், நம் இதழில் பல புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் உருவாகி வருகின்றன. அறிவு, பொழுதுபோக்கு, வாழ்க்கை அனுபவங்கள், படைப்புகள், இவை அனைத்தையும் மேலும் வளப்படுத்தும் வகையில் புதிய அம்சங்களை உங்களுக்குக் கொண்டு வருகிறோம். இதன் மூலம், உங்கள் வாசிப்பு அனுபவம் மேலும் சுவையாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.



அத்துடன், நம் இதழில் ஒரு சுவாரஸ்யமான புதிய பக்கமும் இடம் பெற்றுள்ளது. அதில், இதழின் பக்கங்களில் இருந்து எடுக்கப்பட்ட எளிய மற்றும் சுவாரஸ்யமான கேள்விகளுக்குப் பதில் அளித்து, நீங்கள் பரிசுகள் வெல்லும் வாய்ப்பு அமைந்துள்ளது. இது பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஒருசேர மகிழ்ச்சியூட்டும் ஒரு அனுபவமாக அமையும்.




குழந்தைகள் இப்படிப்பட்ட செயல்பாடுகளில் ஆர்வமுடன் கலந்துகொள்ளப் பெற்றோர் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் . இத்தகைய முயற்சிகள் குழந்தைகளின் சிந்தனைத் திறனை வளர்க்கவும், வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தவும் உதவும்.

நம் இதழின் வலிமை வாசகர்களே!! தொடர்ந்து உங்கள் ஆதரவை வேண்டிக்கொள்கிறோம்!!

பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்

# கதை கதையாம் காரணமாம்

## பலவீனம்தான் பலம்

ஒரு சிறுவன் ஜூடோ கற்றுக்கொள்ள விரும்பினான். ஆனால் அவனோ ஒரு விபத்தில் இடது கையை இழந்திருந்தான். இந்தக் குறைபாடு இருந்தபோதிலும், ஒரு குரு அவனுக்குப் பயிற்சி அளிக்க ஒப்புக்கொண்டார்.

குரு அவனுக்கு ஒவ்வொரு நாளும் பயிற்சி அளித்தார். ஆனால் அவர் அவனுக்கு ஒரே ஒரு “பஞ்ச்” நுட்பத்தை மட்டுமே கற்றுக் கொடுத்தார். நான்கு அல்லது ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன. அப்போதும் பயிற்சி அப்படியே தொடர்ந்தது. சிறுவனுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் அவன் தொடர்ந்து பயிற்சி செய்தான்.

ஒரு நாள் சிறுவன் இதுகுறித்துக் கேட்டபோதும், குருவோ "இந்த ஒரு பஞ்ச் உனக்குப் போதும்" என்றார். நாட்கள் கடந்தன. குரு சிறுவனை ஒரு போட்டிக்கு அனுப்பினார். ஒரு கையுடன் வந்த சிறுவனை பலர் இழிவாகப் பார்த்தார்கள். ஆனால் குரு சொன்னது சரிதான். சிறுவனே வெற்றி பெற்றான். தன்னை விட வலிமையான அனைவரையும் எதிர்த்து அவன் ஆக்ரோஷமாகப் போராடி அவர்களைத் தோற்கடித்தான். எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சிறுவனும் கூட.

"குருவே, ஒரு கையால் மட்டும் எப்படி வெற்றி பெற முடிந்தது, ஒரே ஒரு பஞ்சைத்தானே கற்றுக்கொண்டேன்?" என்று கேட்டான்.

குரு சொன்னார்: "இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, ஜூடோவில் மிகவும் கடினமான பஞ்சைப் பயிற்சி செய்துள்ளாய். இரண்டு, இந்த பஞ்சைத் தடுக்க, பஞ்சரின் இடது கையை வளைக்க வேண்டும். உன்னிடம் இடது கை இல்லை."

சிறுவன் குருவுக்கு மனதார நன்றி சொன்னான்.



# ஊர்க்குருவி -6

# குறிக்கோள்



இமயம் நோக்கி நடக்கையிலே
இடரும் சிறுகல் தடையாமோ?
தாயின் கனவை நிகழ்த்திடவே
தரணியில் எதுவும் பயமாமோ?
ஊரார் உரைக்கும் சிறுபொருள்கள்
உந்தன் மனதைச் சிறையிடுமோ?
எதிர்க்கும் கரங்கள் எத்தனையும்
எல்லைக் கோட்டை மறைத்திடுமோ?
மறுக்கும் மாந்தர் மனமெல்லாம்
மாலை நாளை சூடாதோ?
தகிக்கும் உச்சிக் கதிரவனும்
தனையனை நிலவெனத் தழுவாதோ?
வெறுக்கும் வெட்டிப் பேச்செல்லாம்
வெல்லமாய் வெற்றியில் புகழாதோ?

நீ
உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தையதும்
உலகை வாழ வைக்குமடா ..
விதியால் வந்த இடரெல்லாம்
மதியால் வெந்தே மடியுமடா ..
கருவில் நல்ல பொருளிருந்தால்
காலம் மாற்ற முடியுமடா ...
உருவம் சிறிதே என்றாலும்
கடுகா காரம் குறையுமடா ?

சிறிது பெரிது என்றெதுவுமில்லை
சிந்தனை சிறந்தால் வெல்லுமடா ...
அரிது அரிது மானுடமென்றால்
அனைத்தும் நன்றே நினைந்திடடா ...
அக்கம் பக்கம் எதிரியில்லை
ஆன்ற செயல்கள் செய்திடடா ...
வேடிக்கை மனிதனாய் வீழ்ந்திடாமல்
வேந்தன் போலே வாழ்ந்திடடா ...

எட்டடிக் கிணற்றைத் தாண்டிவந்தால்
எட்டுத் திக்கும் உலகமடா ...
சொல்லும் செயலும் சேர்த்து வந்தால்
சொர்க்கம் வாழ்வில் நிகழுமடா ..

நட்பே !!
உனக்கு மட்டும் உரைக்கவில்லை
எனக்கும் இதுவே பொருந்துமடா !!!

**என்றும் அன்புடன்**
**மெய்யரசு நடராஜன்**



> *We believe in strong partnerships, not just with patients, but with people who care about each other.*

## WHY US?

- *Germany's first AI-powered dental monitoring system.*
- *3D scans & digital diagnostics for precision and clarity.*
- *In-house dental lab – faster, more accurate results.*
- *Multilingual, culturally aware team.*
- *Personal consultation & transparent treatment – always*

# WEISS32

PLATINUM SPONSER

WEISS32 ZAHNZENTRUM IS A LEADING DENTAL CENTER IN STUTTGART, COMMITTED TO PROVIDING WORLD-CLASS DENTAL CARE, ADVANCED TREATMENTS, AND RADIANT SMILES.WE COMBINE TECHNOLOGY, EXPERTISE AND EMPATHY TO PROVIDE FAMILIES WITH CARE BUILT ON TRUST, TRANSPARENCY, AND COMFORT.

**WITH WARMTH AND EXCELLENCE, WEISS32 ZAHNZENTRUM LIGHTS UP OUR CELEBRATION THIS DIWALI.**

+49 (0) 711 / 76 02 69 | info@weiss32.de | www.weiss32.de

# Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி






தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள விரும்பும் புதிய மாணவர்களை எங்கள் கல்விக் குடும்பத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

Tamil School Registration Process:

➜ Step 1: Online Sign-Up (இணையப் பதிவு)
எங்களது பதிவு இணைப்பிற்குச் சென்று தேவையான விவரங்களைப் பூர்த்தி செய்யவும். பதிவு செய்யும் போது தேவையான அனைத்து சான்றுகளையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
பதிவு இணைப்பு:
https://stuttgarttamilsangam.com/STSangam/studentSignIn

➜ Step 2: Trial Classes (மாதிரி வகுப்புகள்)
உங்கள் பதிவுக்குப் பிறகு தமிழ்ப் பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் உங்களைத் தொடர்பு கொண்டு, மாதிரி வகுப்புகளுக்கான தேதிகளை அறிவிப்பார்கள். உங்கள் குழந்தை கற்றல் சூழலை அனுபவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு.



➜ Step 3: Final Enrollment (இறுதிச் சேர்க்கை)

மாதிரி வகுப்புகளுக்குப் பிறகு தொடர விரும்பினால், மாணவர்கள் தமிழ் மெய்நிகர்க் கழகத்தில் (TVA) அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்படுவார்கள். இதனுடன், உங்கள் குழந்தையின் தமிழ் கற்றல் பயணம் தொடங்கும்.



**நம் தலைமுறைகள் தமிழுடன் தழைக்கட்டும்!**



# When 300 women repaired a runway - overnight Bhuj

During the India Pakistan war of 1971, 300 village women repaired a runway which helped India win the war. It was the middle of nowhere in the west of India. In the dark cover of night, some 300 people were working on something. The crowd was performing a crucial task that will change the outcome of a war fought just a few kilometers away. Interesting, all 300 were women, and more curiously, they were repairing an Indian airforce runway.

**British India split:** British India was colonized and ruled by Britain for more than 300 years. World War II severely crippled the British economy, and it also owed British India a vast sum as debt. Britain, at last, swallowed the bitter pill and decided to declare British India an independent country. Muslim League under Mohammed Ali Jinnah raised demands for a separate homeland for Muslims. Though not encouraged initially, Britain changed its mind and separated British India into India and Pakistan (East and West Pakistan). Kashmir, a princely state in the north of India, didn't decide whether to join India or Pakistan. This delay allowed Pakistan to invade Kashmir. On the very first day after independence, both countries were on each other's throats. Officially the first war between the neighbors started. United Nations intervened and negotiated a ceasefire.

**Indo Pak war 1971:** In 1971 the citizens of East Pakistan, modern-day Bangladesh, revolted against the West Pakistan government over the ill-treatment and imposition of Urdu. The revolt turned into violence, and India intervened. Indira Gandhi, the prime minister of India, sent in the Indian army to liberate East Pakistan and declare it as an independent country. West Pakistan condemned the action and, without any warning, attack several important Indian airbases. The attack was the same technique followed by Isreal against Egypt in the seven-day war. Pakistan wanted to cripple India's airforce before an all-out war. One of the airbases worst affected was in Bhuj.





Bhuj was a small town close to the India-Pakistan border. Bhuj was attacked day and night with napalm bombs by the Pakistan airforce. As the airbase was crippled, the Indian airforce was not able to counter-attack the Pakistan airforce. Bhuj airbase's runway was damaged severely and needed repair. Indian airforce contacted the Border Security Force(BSF) for the workforce. Unfortunately, BSF was assigned to block an all-out Pakistan invasion planned in a few days. IAF sent Vijay Karnik to take care of the situation




**Women warriors:** Vijay Karnik visited Bhuj and asked for help from the village elders. Three hundred women volunteered for the repair worked. They were hurdled into airforce trucks and brought into the airbase. The team worked under cover of darkness to avoid being sighted by Pakistan aircraft. A long siren announced an impending air attack and a short siren to signal the attack is over. The women wore green sari as camouflage and ran into bushes during the attacks. The temperature dropped to 5C, but the will of the women remained intact. In 2 days, the runway was back in action, and the Indian airforce started to deploy fighters to guard Indian airspace.

The relentless air attack from Bhuj airbase halted the Pakistan army's advance into the Indian territory. The war tilted in favor of India, and the Simla Accord was signed to end the war. Indira Gandhi offered a cash incentive to the women who worked for the runway, but they rejected it. The women stated that it's their duty to work for the country. IAF erected a memorial to celebrate the women who helped India win the 1971 war. A movie **Bhuj** with lead Ajay Devgn Based on the incident will hit theatres soon.

**-Karthik Nambi**



# பதில் தேடி விளையாடு

### 1) தமிழ்ப் புதிர் (Riddle)

கேள்வி:

என்ன அது? உடல் இல்லை, ஆனால் வாய் இருக்கிறது. சாப்பிடாது, ஆனால் சத்தம் செய்யும்.

### 2) குழந்தைகள் கணக்கு (Math)

கேள்வி:

ஒரு குழந்தையிடம் 7 மிட்டாய்கள் இருக்கின்றன. நண்பர் 3 மிட்டாய்கள் கொடுத்தார். குழந்தை 4 மிட்டாய்களைச் சாப்பிட்டது. இப்போது எத்தனை மிட்டாய்கள் மீதம்?

## 3) Find the 7 differences





## 4) Who is the Tamil poet?

பதில்கள் :

1) மணி (Bell)
2) 6 மிட்டாய்கள்
3) வானம், ஏரி, சட்டை, ஐஸ்க்ரீம், மரம் (ஆப்பிள்கள்), படகு / கப், பந்து
4) மகாகவி பாரதியார்

# ANOTHER WARREN IN PROGRESS EPISODE 3

## !!! Mr. Master is back to reality !!!




What??? is it a dream?
It seems like a blessing. Lets get back to reality with a coffee



What did he teach me? I dont remember much of what we spoke. He said not to copy the investments from others and he spoke about Promoter's integrity. But is this enough ?
I do not know how much to invest and how to search for such promoters. Will he come again to teach them to me ?




Ohh this guy.... Speaking about Swamy brings troubles too? I won't pickup




**Daklas**: Machi, Congratulations on your first salary da.

**Mr. Master:** Thanks da. I know what you will ask for. Lets catch up for dinner. I’ll pay.

**Daklas**: Code accepted. **Mr Master**: ???

*Mr. Master is throwing a party at a south Indian restuarant for this friend Daklas.*



**Daklas**: So whats up Dude? You found how to invest and spend the money you got?

**Mr. Master:** Dude, good that you asked. Let me explain you about a dream that I got. It was in outer space.......

..............................................................................................,







**Daklas thinks!!!** Oh god.., why did I ask this to him. He talks as if Vande Bharat and ICE trains.... non-Stop.. Keep on running....,



**Mr. Master:** A man of such a high wisdom he (Stockananda) was.. I didn't even asked for this Whats app or means to contact again. Now I do not know how much to invest to start with..,

**Daklas:** Let me get him an idea so that he gives a break and start thinking. Oh god!!! where shall go for an idea !!! Let us ask for Bill. I cant take this any longer





**Daklas**: Dude, here you go. I got an idea for you. As you are not as smart as me, why don’t you try investing smaller chunks like this bill amount..,

**Daklas**: You won’t have the guilt of not investing and at the same time you won’t have the fear of losing big. Anyway we are not going to remember what we spent in all such meet ups and eating through out our lives. what do you say?




**Mr. Master**: I would even go one step further dude. Next time I ask you such questions on call so that I invest even what we spent hereeeeeeeee





**Daklas**: Call the Waiter !!! I will start eating again !!!!!!

*-Sunderramavignesh Nagarajan*

# Short and Easy German Sentences




Übersetzt von
Guruprasanth Meyyarasu


How Reading
Changes Your Brain
Rewires
Neural Pathways
Boosts
Imagination
& Empathy
Simulates
Real Experiences
Improves
Memory
& Attention
Slows
Brain Aging
Reduces
Stress Fast
6 min.
Cool Facts
Reading is
Not Natural
Audiobooks =
Like Reading
Fiction
Boosts
Empathy
Silent Reading
Was Rare
Reading = Stronger Brain, Calmer Mind, Sharper Thinking.






# அறிந்ததில் அறியாதது

## மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

**புரிதல்:**
மண் குதிரையில் ஆற்றைக் கடக்க முயன்றால், உடனே மண் கரைந்து, ஆற்றில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

**உண்மையான பொருள்:**
மண் குதிரை"யை" நம்பி ஆற்றில் இறங்கலாமா?
மண் குதிர் என்பது ஆற்றின் நடுவில் இருக்கும் மணல் திட்டு /மேடு. இதை நம்பி ஆற்றில் இறங்கினால் ஆற்றில் சிக்கிக் கொள்ள நேரிடலாம்.

# மாதம் ஒரு சொல்



# கீற்றல்கள்



Sarvin




Shreya Muthaiah




Aadhya

# நிழற்பதிவு

*A Halloween themed castle with spooky guards in yellow eyes. Mirrored in the pond.*



-Sivakumar Murugesan

## What Is Coding?

Coding is like giving instructions to a computer. Just like a recipe tells you how to cook, code tells a computer what to do. Without code, computers can't run apps, games, or websites.

## Coding Languages Made Simple

**Scratch →** A drag-and-drop coding tool for beginners.
**Python →** Easy to read, great for kids and beginners.
**HTML & CSS** → Build and style websites.
JavaScript → Makes websites interactive.

# CTRL + Learn: My Computer Adventures - Edition 3




## My First Program: "Hello, World!"

In Python, it looks like this: print("Hello, World!") This single line tells the computer to show the words Hello, World! on the screen.

## Why Learn Coding?

Helps you create games and apps.

- Builds problem-solving skills.
- Prepares you for future tech jobs.
- It's actually fun once you start!

# FUN FACTS BOX

1. The first programmer in history was Ada Lovelace (1800s).

2. The word "bug" in coding came from a real moth stuck in a computer.

3. Google and Instagram were originally coded using Python.

**Tools to Try:**

Scratch (scratch.mit.edu) → Create games and animations.

Repl.it → Code in different languages right in your browser.

Code.org → Learn coding through fun puzzles and games.

**About the Author:**

Sanjay Santhosh Kumar, 12, loves exploring computers, has started learning coding—especially Python—and enjoys discovering new tech tips each month.



Outside the computer, he enjoys reading storybooks and comic books, playing with friends, and has a keen interest in space and general knowledge quizzes.

# நிழல் நெஞ்சங்கள்

இந்த பகுதியில், மனதின் அமைதியான பிரதிபலிப்புகளே உங்களிடம் பேசும். நிழல் ஒருவரை முழுமையாகக் காட்டாததுபோல, நம் நெஞ்சமும் முழுதாய் யாருக்கும் தெரியாது. சிலவேளை நாமே நம்மை அறியாமல் போகிறோம். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நமது உணர்வுகளும் எண்ணங்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. அந்த மாற்றங்களின் பிரதிபலிப்புகளாக உருவான சிந்தனைகள்தான் இங்கே உங்களுக்காக...

**01-அழகு**

நாம் நேசிப்பவர்கள் எப்பொழுதும்
நமக்கு அழகாய்த் தோன்றும் மாயம் என்ன?
அவரின் முகத்திலே இருக்கிறதா அந்த மந்திரம்?
அவரின் இயல்பில் இருக்கிறதா அந்த ரகசியம்?

இல்லை.
இவற்றையெல்லாம் கடந்த ஒன்று இருக்கிறது.
அழகு எனும் மெல்லிய மெழுகை
நம் காதல்தான் பூசுகிறது!

இதயம் விரும்பும் ஒருவரை
காதல்தான் தேவதையாக மாற்றுகிறது.
அழகு வெளியில் இல்லை,
அன்பின் கண்களில்தான் அது பிறக்கிறது...

அதே அன்பின் கண்களால்
உலகத்தையும் பார்த்து விடும்போது,
அவ்வுலகம் தானே அழகாகி
வாழ்க்கை ஒளிரத் தொடங்குகிறது!!

-மஞ்சுபார்கவி சுகுமாரன்



# BLOCKCHAIN REVOLUTION
# THE BITCOIN PIZZA DAY STORY




## How 10,000 $BTC Became a Legendary Lesson

In 2010, a young programmer named Laszlo Hanyecz made a decision that would change crypto history. He wanted pizza. But he didn't have cash handy. Instead, he used his Bitcoin, a new digital money that almost nobody knew about back then. What happened next became the most famous trade in cryptocurrency: pizzas for thousands of Bitcoins. This simple story shows how Bitcoin's value exploded over time and why people now call **May 22 "Bitcoin Pizza Day."** This is a tale of opportunity, belief, and the unexpected consequences of early adoption.

## A Hungry Programmer in Florida

Laszlo lived in Jacksonville, Florida. He was 30 years old and loved computers. Bitcoin had launched just a year earlier, in 2009, created by the mysterious Satoshi Nakamoto. Back then, one Bitcoin was worth less than a penny. Laszlo mined thousands of them on his home computer, it took days but cost almost nothing in electricity. On May 18, 2010, Laszlo posted on a Bitcoin forum called Bitcoin talk. He wrote: "I'll pay 10,000 bitcoins for a couple of pizzas... like maybe 2 large ones so I have some left over for the next day." He didn't care about the money. Bitcoin had no real value yet—no shops accepted it. Laszlo just wanted to prove it could buy real things.

The forum was quiet at first. People thought he was crazy. Who trades 10,000 coins for pizza? But four days later, on May 22, a 19-year-old student named Jeremy Sturdivant from California replied. Jeremy had extra bitcoins and wanted to help. "Sure, I can do that," he said. Laszlo sent 10,000 BTC to Jeremy's wallet. Jeremy ordered two Papa John's pizzas, worth about $41 and paid with a credit card. He shipped them to Laszlo overnight.

Laszlo finally got his pizzas: one with pepperoni and onions, the other with mushrooms. He ate them happily. "I just want to get Bitcoin used," he told friends. "This shows it works for real purchases."



**What Happened to Those Bitcoins?**

Fast forward to today. Those 10,000 BTC would be worth over $1 billion at current prices. Laszlo's pizzas cost $25 each—today, one slice might cost more than all the bitcoins in the world back then! Jeremy, the pizza buyer, also never sold his share. He spent most of it on other things over the years, but he calls it "the best trade I ever made" because it made Bitcoin famous.

Neither man regrets it. Laszlo still mines Bitcoin and believes in its future. "I would do it again," he said in interviews. "The pizza was good, and it helped Bitcoin grow." Jeremy agrees: "We showed the world crypto could buy real stuff. That's priceless."

**Why This Story Matters**

This wasn't just about pizza. It was the first real-world Bitcoin transaction. Before that, Bitcoin was just code on computers. Laszlo's trade proved it could move value peer-to-peer, without banks. It inspired thousands of merchants to accept Bitcoin later.

Today, Bitcoin Pizza Day is celebrated every May 22. People post pizza memes, eat slices, and remember how far crypto has come from worthless coins to trillion-dollar markets. Companies like Microsoft and Starbucks now take Bitcoin. Stablecoins pay for coffee in Japan, like the recent $NETX pilots with WEA Japan and Netstars at Haneda Airport.

But the lesson is bigger: Hold what you believe in, but spend wisely. Laszlo's story warns about volatility; Bitcoin went from pizza money to life-changing wealth. It also shows crypto's power: anyone can send value globally, instantly, forever recorded on the blockchain.

**The Man Behind the Legend**

Laszlo Hanyecz grew up tinkering with tech. He worked on Apple's graphics software before Bitcoin. After Pizza Day, he kept contributing he created the first Bitcoin wallet app for Mac and improved GPU mining. Even as Bitcoin soared to $69,000 per coin in 2021, Laszlo stayed humble. "I mined 1 million bitcoins total," he once joked. "If I'd held them all, I'd be the richest guy alive. But pizza tasted better."

Jeremy Sturdivant, now in his 30s, runs a crypto business. He bought a house with his remaining bitcoins. Both men laugh about it now. "We didn't know," Laszlo says. "Nobody did."

Bitcoin Pizza Day reminds us: Crypto starts with simple ideas. A hungry coder, two pizzas, and 10,000 coins sparked a revolution. What's your "pizza trade" story? In a world of Lambos and moonshots, sometimes the best trades feed your stomach, and your vision.

-Kirubakaran Kumara Vijayan

SHAPING YOUR FUTURE

# DENIZ ÜNVER REAL ESTATE INVESTMENTS

## Ready to invest in German real estate but not sure where to start?

Deniz Ünver Real Estate Investments makes the process simple, transparent, and fully guided, every step of the way.



PLATINUM SPONSOR

## what we offer?

1.Understand your financial goals and create a plan that fits you.

2.Share expert insights to help you invest with confidence.

3.Build a tailored strategy to find the right property.

4. Support you through every step from paperwork to purchase.

5. Stay connected even after your investment for long-term success.

**Dont Hesitate to contact**
**Scan the WhatsApp QR code**
**or message +49 176 21476492**
to discuss your investment plans and discover how Deniz Ünver Real Estate Investments can help you build a secure and prosperous future.

# சொல்லுங்கள் வெல்லுங்கள்!
## வாசகர்களுக்கான சிறப்புப் பரிசு!

அன்பான வாசகர்களே,

இந்த இதழை நீங்கள் ஆர்வத்துடன் வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்கள் வாசிப்பு அனுபவத்தை இன்னும் சிறப்பாக்க, ஒவ்வொரு மாதமும் ஒரு எளிய கேள்வியுடன் கூடிய பரிசுப் போட்டி நடத்துகிறோம் 🎉

❓ **இந்த மாதக் கேள்வி:**
இந்த இதழில் உங்களுக்கு மிகவும் பிடித்த பகுதி எது?
👉 உங்கள் பதிலில் இந்த இரண்டு விஷயங்களை மட்டும் எழுதுங்கள்:

1. **உங்களுக்குப் பிடித்த பகுதியின் பெயர்?**
2. **அந்தப் பகுதி உங்களுக்கேன் பிடித்தது?**

இதில் சரி–தவறு என்று எதுவும் இல்லை.
உங்கள் கருத்தே பதில். உங்கள் பதில்களை, **stsnatpedu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

இந்த மாதம் வரும் அனைத்துப் பதில்களிலும் இருந்து குலுக்கல் முறையில் 2 வாசகர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் 🎁✨
ஆகவே, தவறவிடாமல் உங்கள் பதிலை அனுப்புங்கள்.

வாசிப்போம்.. எழுதுவோம்.. வெல்வோம்!!

# இறுதியல்ல நிறைவு



மன்னர் ஐந்தாம் சார்லஸ் தனது அரியணையைத் துறந்து ஒரு கிறிஸ்தவ மடத்தில் அமைதியாக வாழ்ந்தார். நேரத்தைக் கடத்த, அவர் கடிகாரங்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, பழுதுபார்த்தார். ஒரு முறை, சரியாக இயங்காத இரண்டு கடிகாரங்களைச் சரிசெய்து, அவை சரியான நேரத்தைக் காட்ட முயன்றார். ஆனால் இரண்டு கடிகாரங்களும் ஒத்துழைக்க மறுத்தன. இரண்டு கடிகாரங்களும் ஒரே நேரத்தைக் காட்டாது என்ற ஆங்கிலப் பழமொழியின்படி, அவை இரண்டும் தங்களுக்குப் பிடித்த நேரத்தைக் காட்டின.

உடனே, அருகில் நின்றிருந்த தனது உதவியாளரிடம், "என்ன முட்டாள்தனம்! இரண்டு கடிகாரங்களை ஒன்றாக இயக்கக் கூட முடியாத நான், நான் ஆட்சி செய்தபோது ஆயிரக்கணக்கானோர் ஒரே மாதிரியாகச் சிந்தித்து செயல்படுவார்கள் என்று எதிர்பார்த்தேன்!" என்றார்.

நீதி: ஒவ்வொருவரும் அவரவர் வழியில் சிறப்பு வாய்ந்தவர்கள்; அனைவரையும் நம் பாதையில் கொண்டு வர முயற்சித்தால் நாம் முட்டாள்கள்.
அனைவரும் அவரவர் வழியில் சிறக்க, கடவுள் அருளட்டும்🙏🙏

**--- நன்றி! வணக்கம் ! ---**

**ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு**



General Feedback

இம்மாத நட்பேடு இதழ் பற்றிய உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அவற்றை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு
பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்